**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. NO.31/2013**

**12.10.2022 - வா.சா. 1 ஜனார்த்தனன் சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி என் தாயார். என் தகப்பனார் வெங்கடேச நாயுடு 5.5.2013ல் வயது மூப்பின் காரணமாக இறந்தார். தாவா 12 இனமான பஸ் 10.8.2022 வரை நல்ல முறையில் இயங்கியது. அதை நான் தான் ஓட்டினேன். என் தாயார் 30.8.2021 ல் இறந்தார். அந்த பஸ்ஸுக்குண்டான பர்மிட் என் தாயார் பெயர் இருந்தது. பர்மிட் 1982ல் என் தகப்பனார் பெயரில் வாங்கப்பட்டது. 2001ல் என் தாயார் பெயரில் பர்மிட் மாற்றம் செய்யப்பட்டது. என் தாயார் பெயரில் மாற்றம் செய்யப்பட்டதற்கு காரணம் ராசி. ஸ்ரீ வெங்கடேஸ்வரா மோட்டார் சர்வீஸ் என்ற பெயரில் அனுமதி வழங்கப்பட்டது. தேவிகாபுரம் - சாத்தனூர் அணை வரை பர்மிட் வழங்கப்பட்டது. என் அப்பா பெயரில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட பர்மிட்டை நான் தாக்கல் செய்யவில்லை. 12ம் இன சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பர்மிட் என் அம்மா பெயரில் உள்ளது. என் அம்மா பெயரில் இருந்த அசல் பர்மிட் 2010ல் புதுப்பிக்கப்பட்டது. 2001ல் என் அம்மா பெயரில் பர்மிட் மாற்றும் போது டி.என். 25-345. ஸ்பேர் பஸ் வாங்குவதற்கு அனுமதி கிடையாது. தாவா 12ம் இன சொத்திற்கு நான் பாகம் கோரியுள்ளேன். அந்த காலக்கட்டத்தில் அந்த பஸ் என் தாயார் பெயரில் இருந்தது. அந்த பஸ்ஸுக்கு அவர் தான் உரிமையாளர். நான் தாவா 12ம் இன சொத்து குறித்து பாகம் கோரியுள்ளதற்கு மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலருக்கு மனு கொடுத்துள்ளேன். அதற்கு அவர் வழக்கு நிலுவையில் உள்ளதால் நீதிமன்றத்தில் தீர்வு காணும்படி கோரியுள்ளார். பஸ்ஸின் மதிப்பு ரூ. 10 லட்சம். பர்மிட்டிற்கு சட்ட ரீதியாக மதிப்பு இல்லை. தாவாவில் பஸ்ஸின் மதிப்பு ரூ.60 லட்சம் என்று மதிப்பிட்டதற்கு காரணம் வழித்தட உரிமத்தையும் சேர்த்து சொல்லியுள்ளேன். 1ம் பிரதிவாதி பஸ் அவருக்கு உரிமையானது என்றும், அதில் பாகம் கோர முடியாது என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றால், அவ்வாறு என் தாயார் தாக்கல் செய்யவில்லை. அசையும் சொத்துக்கள் (நகைகள்) இடைமனு எண் 154/2021 அனுமதிக்கப்பட்ட அளவில் சேர்க்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அசையும் சொத்துக்கள் அனைத்தும் என் தாயார் 1ம் பிரதிவாதியின் சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நகைகள் அனைத்தும் 2ம் பிரதிவாதியிடம் உள்ளது. பொருட்களை எதன் அடிப்படையில் மதிப்பீடு செய்துள்ளேன் என்றால் ஒரு அனுமானத்தில் மதிப்பீடு செய்தேன். அவை இருப்பதற்கு ஆதாரம் உள்ளது. ஆனால்

எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.  அசையும் சொத்துக்கள் கற்பனையானது என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- ஜனார்த்தனன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.